30th July 1965]

சென்னை-திருப்பதி மார்க்கத்தில் அரசாங்க பஸ்கள்

*34 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்ட தேதி வரையில் சென்னைக்கும்-திருப்பதிக்கும் இடையில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் எவ்வளவு ?

(இ) அதனால் கிடைத்த ஒவ்வொரு ஆண்டு மொத்த வருமானம், செலவு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Five buses were operated on the routes, Madras to Tirupathi since 1962 and five buses were kept as spares exclusively for operating on these routes.

(b)

	Total Collections.	Expenditure.
	RS.	RS.
1962	5,38,371	5,82,905
1963	5,36,436	5,82,905
1964 (up to 30th July 1964) ..	3,53,512	3,38,564
Total ..	14,28,319	15,04,374

திரு. கோ. சி. மணி : இந்த திருப்பதி மார்க்கத்தில் சென்று கொண்டிருந்த பஸ்களை இடையில் நிறுத்தியதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆந்திரா சர்க்கார், நாம் ஒரு பஸ் ஓட்டினால் ஒரு பஸ் ஸ்பேர் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதி போட்டார்கள். அதன்படி ஐந்து பஸ்கள் ஓட்ட பத்து பஸ்கள் வைக்கும்படியான நிலை ஏற்பட்டது. நஷ்டம் அதனால்தான். இன்றைக்கு ஆந்திராவிற்கு செல்கிற பஸ் இன்றே திரும்பக் கூடும் என்ற அனுமதி இருக்குமானால் அதை ஓட்டுவதில் லாபம் இருக்கும். இன்று அங்கு போகும் பஸ்ஸை அங்கே நிறுத்தி விடவேண்டும். வேறொரு பஸ்ஸைத்தான் அந்த ஊரிலிருந்து அன்றைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அதனால் ஐந்து பஸ்சுக்குப் பத்து பஸ்கள் வேலை செய்கிற நிலைமை இருக்கிறது. இரண்டாவதாக, இன்டர் ஸ்டேட் டாக்சில் அவர்கள் அதிகமான ஒரு சர்சார்ஜ் விதித்தார்கள். ராஜ்ய சர்க்காரின் வாதம் அந்த அதிகப்படியான சர்சார்ஜ் விதிக்கக் கூடாது, அவர்களுக்கு அப்படி விதிக்கிற அதிகாரம் இல்லை என்பது. அவ்வாறு நாம் விவாதம் செய்துகொண்டிருக்கிற போது நம் பஸ்களை அவர்கள் ஸீஸ் செய்து விட்டார்கள். அதனால் பஸ்ஸை நிறுத்திவிட்டோம்.

திரு. கோ. சி. மணி : நம் அரசாங்கமும் ஆந்திரா அரசாங்கமும் இது சம்பந்தமாக ஒரு பேச்சு வார்த்தை நடத்திற்றே, அதன் முடிவைப்பற்றி மத்திய அரசாங்கத்தினிடம் தெரிவித்து ஏதாவது நடவடிக்கை எடுக்க நம் அரசாங்கம் முயற்சித்ததா ?

[30th July 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு மத்திய அரசாங்கத்திடம் தெரிவிப்பதற்கான உத்தேசம் கிடையாது. இரண்டு மாநில அரசாங்கங்களும் லாபகரமாக ஏற்பாடு செய்து கொண்டால் அதை எடுத்து நடத்தலாம். அப்படி லாபகரமான ஏற்பாடு செய்து கொள்ளாவிட்டால் நாங்கள் பஸ் நடத்தப் போவது இல்லை.

திரு. ம. கமலநாதன் : லாபகரமாக பஸ் விடுவதற்கு ஏன் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்கவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு பஸ் அங்கு நின்று இன்னொரு பஸ் வந்தால்தான் அங்கிருந்து எடுத்து வர முடியும் என்று சொன்னார்கள். தனியார் கம்பெனிகள் திருப்பதிக்கு பஸ்கள் விடுகிறார்கள். அரக்கோணத்திலிருந்து போகிறது. அப்படி ஒன்றும் சங்கடமாகத் தெரியவில்லை. பஸ்கள் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. அதேபோல் பஸ் விட ஏன் நம் அரசாங்கமும் ஆவன செய்யக் கூடாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்களுக்கு என்னென்ன முறையிலே லாபம் வருகிறதோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டபூர்வமாக கணக்குகள் வைத்துக் கொண்டு நாம் நிர்வாகத்தை நடத்துகிற காரணத்தினால் இது எங்களுக்கு நஷ்டம் என்று ஏற்பட்டு விட்டது. அந்த நஷ்டத்தால் நாங்கள் பஸ் விடவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கணக்கு வைத்துக்கொண்டு நடத்துகிறோம் சட்டப்படி என்றால் தனிப்பட்ட முதலாளிகள் கணக்குகள் வைத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்றுதானே பொருள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவரவர்கள் இஷ்டம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சென்னை-திருப்பதிக்கு ஐந்து பஸ்கள் விட்டதாகச் சொல்கிறார்கள். திருப்பதியிலிருந்து சென்னைக்கு ஆந்திரா சர்க்கார் அதேபோல் ஐந்து பஸ்கள் விட்டு நம் அரசாங்கம் ஐந்து பஸ்கள் ஆப்பரேட் செய்வது என்ற பேச்சு வார்த்தையை நம் அரசாங்கம் ஆந்திரா அரசாங்கத்தோடு நடத்தினார்களா ? அப்படி நடத்தவில்லையென்றால் இனிமேலாவது நாம் எவ்வளவு பஸ்கள் விடுகிறோமோ அதேபோன்று அவர்களும் சென்னை நகரத்திற்கு வந்து போகிற அளவிற்குப் பஸ்கள் விட்டால் வரி விகிதத்தில் மாற்றம் இல்லாமல் விடலாம் என்பதுபற்றி நம் அரசாங்கம் அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான ஆலோசனை ஆந்திரா சர்க்காரிடமிருந்து வந்தால் பரிசீலிக்கப்படும்.

30th July 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதை லாபகரமாக நடத்துவதற்கு நம் அரசாங்கம் ஆந்திரா அரசாங்கத்திடம் தெரிவித்த யோசனைகள் என்னென்ன? அவைகளில் எதை ஆந்திர சர்க்கார் நிராகரித்தது? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் இதற்கு முன்பு பதில் சொன்னபோது சபையில் இல்லை என்று நினைக்கிறேன். இதைத் திரும்பவும் சொல்லுகிறேன். இங்கிருந்து போகின்ற பஸ் அன்றைய தினமே சென்னைக்குத் திரும்பி வரவேண்டும் என்று சொன்னோம். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாவது இங்கிருந்து போகின்ற பஸ்களுக்கு சர் சார்ஜ் போடக் கூடாது என்று கேட்டோம். அதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை நமது தொழில் அமைச்சர் அவர்கள் அரசாங்கம் பஸ் நடத்துவது லாபத்தை மட்டும் உத்தேசித்து அல்ல, மக்களுக்கு நன்மை செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள் என்று இந்தச் சபையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் திருப்பதிக்கு இரண்டு பஸ்களையாவது ஓட்டுவதற்கு அனுமதித்து, அதை நஷ்டமில்லாது, லாபகரமான முறையில் ஓட்டுவதற்கு ஏதாவது சீர்திருத்தம் செய்து பஸ்களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்திற்குள்ளே இருக்கும் திருத்தணிக்கு பஸ் விடவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம். இன்னொரு ராஜ்யத்திலிருக்கும் இடத்திற்கு நாம் நஷ்டத்திலேயே பஸ் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று சொல்வது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : அரக்கோணத்திலிருந்து திருப்பதிக்குப் போய்க் கொண்டிருக்கின்ற பஸ்கள் எல்லாம் அன்றைக்கே திரும்பி வந்துவிடுகின்றன. அப்படியிருக்கும்போது, சர்க்கார் பஸ்கள் மட்டும் அங்கேயே நிற்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்களே அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. அது அவர்கள் போட்டிருக்கும் விதி.

திரு. எம். எஸ். மணி : இந்த மாதிரி மாநில அரசாங்கங்களுக்கிடையே தகராறுகள் ஏற்படும்போது, இதை ஏன் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித் தீர்த்துக் கொள்ளக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது அவசியமில்லை.

சென்னை-தஞ்சாவூர் மார்க்கத்தில் அரசாங்க பஸ்கள்

* 35 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு எத்தனை சர்க்கார் பஸ்கள் விடப்படுகின்றன?